கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.8/2018** **PW: 2** **30.10.2025**

2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய கலைவாணன் என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைவாணன் | வயது | 63 |
| த/க. பெயர் | ராமசாமி | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | கீழ்செருவாய் |
| மாவட்டம் | கடலூர் | | |

## குறுக்கு விசாரணை

வாதி சுசிலா எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணி ஆவார். வேலாயுதம் எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் ஆவார். நான் அவர்களின் பெரியப்பா மகன். வாதி எத்தனை இனச்சொத்துக்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் 2 இனச்சொத்துக்கள். அதில் 1 சொத்து வாதி சுசிலா செல்வத்திடம் கிரயம் பெற்ற சொத்து. மற்றொரு சொத்து வேலாயுதத்தின் பூர்வீக சொத்து. எதிர்வாதிகள் எனக்கு உறவினர்கள் தான். நான், சுசிலா கிரயம் பெற்ற பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேனா என்றால் இல்லை. வள்ளியம்மாள் உயில் எழுதி வைத்ததில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் உயிலை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் அதில் சொத்து விவரம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2 உயிலில் சொத்து விவரம் உள்ளதா என்றால் இல்லை. உயில் மூலமாக சொத்து செல்வத்திற்கு கிடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் வழக்கு சொத்தை சுசிலா அவர்களுக்கு செல்வம் கிரையம் கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு உறவினர் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2025.10.30 15:46:53 +0530

Additional District Munsif,
Tittagudi.